சுருக்கம்

பணியமைப்பு – வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை – பயிற்சிப்பிரிவு – மதுரை அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் காவலராகப் பணியாற்றி பணியிடை மரணமடைந்த திரு.எஸ்.முத்துகுமாரசாமி என்பவரது மகள் திருமதி.மு.பார்கவி என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டது – பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு(ப்பி2)த் துறை

அரசாணை (4D) எண்.11

நாள்: 15.09.2022
சுபகிருது வருடம் – ஆவணி 30,
திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.78, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்: 21.04.2017.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (க்யூ1)த் துறை, நாள்: 23.01.2020.
3. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரின் கடித ந.க.எண்.1527/பஅ3/2016, நாள்: 17.02.2021 மற்றும் 14.02.2022.

------

ஆணை:

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரின் கடிதங்களில், மதுரை அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் காவலராகப் பணியாற்றி பணியிடை மரணமடைந்த திரு.எஸ்.முத்துகுமாரசாமி என்பவரது மகள் திருமதி.மு.பார்கவி என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற விண்ணப்பிப்பதற்கு முன்பே திருமதி.மு.பார்கவி என்பவருக்கு 28.08.2006 தேதி அன்று திருமணம் ஆகியிருந்ததால், அரசாணை எண்.96, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள்.18.06.2012–ன் படி தனியரின் விண்ணப்பம் 20.01.2017 தேதி அன்று நிராகரிக்கப்பட்டதாகவும் பின்னர் தனியர் 10.07.2017 தேதி மீண்டும் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி விண்ணப்பித்தார் எனவும் தெரிவித்துள்ளார்.

2. மேலும், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக மதுரை மண்டல பயிற்சி இணை

இயக்குநர் அலுவலகத்தில் பணிநியமனம் வழங்கப்பட்டு 01.08.2018 முற்பகல் அன்று பணியில் சேர்ந்தார் என்று வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. மறைந்த அரசுப்பணியாளரின் திருமணமான பெண் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது என்றும், எனினும் திருமணமான பெண் வாரிசுதாரர்களுக்கு பணி நியமனம் வழங்க தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 15-இல் வழிவகை செய்யப்படவில்லை என்பதால் தனியருக்கு வழங்கப்பட்ட பணி நியமனமானது மேற்கூறப்பட்ட விதிக்கு முரணானதாக கருதப்படுவதால் தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 15 மற்றும் பணப்பலன்கள் பணி நியமன நாளான 01.08.2018 முதல் வழங்குவதற்கு ஏதுவாக தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 28(2)-யும் தனியர் பொருட்டு தளர்வு செய்து பணிவரன்முறை செய்து அரசின் ஆணை வழங்குமாறு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்து மதுரை அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் காவலராகப் பணியாற்றி, பணியிடை மரணமடைந்த திரு.எஸ்.முத்துகுமாரசாமி என்பவரது மகள் திருமதி.மு.பார்கவி என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெறுவதற்கு முன்பே திருமணம் ஆகியுள்ளதால், இறந்த அரசுப் பணியாளரின் திருமணமான பெண் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்க தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 15-இல் வழிவகை செய்யப்படவில்லை என்பதாலும் தனியரின் பணியினை வரன்முறை செய்வதால் தனியருக்கு கிடைக்கக்கூடிய பணப்பலன்கள் பணி நியமன நாளான 01.08.2018 முதல் வழங்குவதற்கு ஏதுவாகவும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 58-ன்கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி முறையே மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 15 மற்றும் பிரிவு 28(2)-னை தனியர் பொருட்டு தளர்வு செய்து பணியிடை மரணமடைந்த திரு.எஸ்.முத்துகுமாரசாமி என்பவரது மகள் திருமதி.மு.பார்கவி என்பவருக்கு கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் பயிற்சிப்பிரிவில் இளநிலை உதவியாளர் பதவியில் 01.08.2018 முற்பகல் முதல் அவர் அப்பணியிடத்திற்கு தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தனியர் தகுதியுடையவராகிறார். மேலும், நிலுவைத் தொகை அதிகமாக வழங்கப்பட்டது என பின்னர் தெரியவந்தால், அத்தொகை வரும் காலங்களில் அவரிடமிருந்து பிடித்தம் செய்யப்படும்.

6. இவ்வாணை குறித்து தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

7. இவ்வாணை, மனிதவள மேலாண்மைத் துறையின் அ.சா.கு.11124/ஜி2/2021-1, நாள் 19.04.2021-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சென்னை-600 032.
திருமதி.மு.பார்கவி, இளநிலை உதவியாளர், (வழி:- இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சென்னை-600 032).
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்.

நகல்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-600 009.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-600 009.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ/அநமு-II) துறை, சென்னை-600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர் 15/9/22

மே.கு.எண். 5770/உ/2018

நாள். .10.2022

மண்டல பயிற்சி இணை இயக்குநர்
அலுவலகம், மதுரை

அரசாணை (டி) எண். 11, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (பயிற்சி) துறை, நாள். 15.9.22 - உரியவருக்கு சார்பு செய்யப்படுகிறது.

மண்டல பயிற்சி இணை இயக்குநர்

7/10/22

பெறுநர்

திருமதி மு. பார்கவி
இளநிலை உதவியாளர்
மண்டல பயிற்சி இணை இயக்குநர் அலுவலகம்,
மதுரை